museum of modern
and contemporary art
sri lanka

**Quarterly Newsletter #8 – July 2024**

‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுமுவ வீட்டுத் திட்டம்’ கண்காட்சியானது ஜூலை 7 நிறைவுற்றது. எமது தலைமை எடுத்தாளுநர் ஷர்மினி பெரெய்ரா மற்றும் எடுத்தாளுநர் துணையாளர்களான ரிட்ச்செல் மார்சலீன், தினால் சசீவ, மற்றும் நிமாயா ஹாரிஸ் இணைந்து எடுத்தாளுமை செய்த முதலாவது சர்வதேச சுய கண்காட்சியாகும். இதுவே இலங்கையின் முதலாவது பெண் கட்டிடக் கலைஞர் மினெட் டி சில்வாவைப் (1918–1998) பற்றிய கண்காட்சியாகும். இக் கண்காட்சியை 856 பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 13,257 பார்வையாளர்கள் பார்வையிட்டனர்.

இக் கண்காட்சியானது, மினெட் டி சில்வாவினால் வடிவமைக்கப்பட்டு, 1958ம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட வடபுமுவ வீட்டுத் திட்டத்தை குறிப்பாக நோக்குகின்றது. இத் திட்டமானது இலங்கையில் ஒரு புதிய அமைப்பிலான சமூக வீட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இத் திட்டமானது வதிவாளர்களின் பங்களிப்பையும் கொண்டுள்ளமை இதன் சிறப்பம்சமாகும். மலைப்பகுதியில் கட்டப்பட்ட இப்பரந்த அபிவிருத்தி திட்டமானது, எவ்வாறு வெவ்வேறு இன-மத மக்களைக் கொண்ட இலங்கை அரச ஊழியர்களுக்காக, தொலைநோக்கு பார்வையுடன் குறைந்த விலையில் வடிவமைக்கப்பட்டது என்பதனை ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சி ஆராய்கின்றது. இருஷி தென்னகோன் (பி. 1989), சுமேத கலேகம (பி. 1988), மற்றும் சுமுது அதுகோரல (பி. 1980) ஆகிய கலைஞர் இதற்கென தயாரித்த திரைப்படத்துடன் சேர்ந்து, ‘88 ஏக்கர்கள்’ கண்காட்சியானது, இவ்வீட்டுத்திட்டத்தை 65 ஆண்டுகளுக்கு பின் மீள நோக்குவதன் மூலம், டி சில்வாவின் தாக்கத்தையும், அவரது வடிவமைப்பு அணுகுமுறையிற்கான சவால்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

சமகால கலையுடன் ஊடாடுவதலில் உள்ள பொதுவான சிக்கல்களை கருத்திற் கொண்டு நாம் பல வழிமுறைகள் ஊடாக பொது மக்களின் கண்ணோட்டத்தை ஆராய்ந்துள்ளோம். இதற்காக, 80 இலவச பொது நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து 1,388 பங்கேற்பாளர்களை உள்வாங்கியுள்ளது.

எமது இளம் பார்வையாளர்களுக்காக MMCA Afterschool ஜனவரி மற்றும் ஜூன் 2024 இடம்பெற்றது. 6 முதல் 10 வயதிற்குட்பட்ட 160 சிறுவர்களை சமூக-உணர்வுகள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கட்டிடக் கலைஞர் மினெட் டி சில்வாவைப் பற்றி கற்றுக் கொண்டனர்.

எமது அடுத்த கண்காட்சிகளுக்கு நாம் தயாராகும் இத் தருணத்தில், ‘Arts 4 ADR’ திட்டத்தின் கீழ் மூன்று புதிய கலைஞ்சர்களை; ஜாஸ்மின் நிலானி ஜோசப் (பி.1990), அனோமா ராஜகருணா (பி.1965) மற்றும் ஹனுஷா சோமசுந்தரத்தின் (பி.1988) படைப்புகளை உங்களுக்கு காட்சிப்படுத்துவதில் நாம் பெருமையடைகிறோம். இம் முயற்சி கலையூடாக எவ்வாறு உரையாடல்ககளின் மூலம், சமூகங்களை ஒன்றிணைப்பது, ஆழ்ந்து சிந்தித்தல் மற்றும் மாறுவழி முறைகளூடாக நல்லிணக்கத்தை சமூக பூசல்கள் உள்ள சூழல்களில் உருவாக்குவதாகும். வவுனியா, மன்னார், அம்பாறை, திருகோணமலை, பதுளை மற்றும் மொனராகலையில் மக்களுடன் இக் கலைஞர்கள் இணைந்து உரையாடி அவர்களின் ஆய்வில் ஒர் பகுதியை முடித்துள்ளனர். இலங்கையிலுள்ள நில பிணக்குகள் மற்றும் பூசல்களை குறிப்பாக ஆய்வு செய்கின்றனர். இதைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள இன்ஸ்டாகிராம் மற்றும் முகப்புத்தகத்தில் எம்முடன் இணைந்திருங்கள்.

மே 2024 இல், ஒரு திறந்த அழைப்பைத் தொடர்ந்து, SEDR இலங்கை (பயனுறுதிமிக்க வகையில் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஆதரவளித்தல்) உடன் இணைந்து எங்கள் உரையாடல் மற்றும் சமூக ஊடாட்ட கூட்டுறவு இல் பங்கேற்க நான்கு இளம் நிபுணர்களை பவநீதா லோகநாதன், சந்துரு திவீகன், கல்யாணி சுந்தரம், மற்றும் தமிழினி சித்திரவடிவேல் அவர்களை நாங்கள் வரவேற்றோம். இக் கூட்டுறவு வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்தைச் சார்ந்த கலாசார பயிற்சியாளர்களை (ஒவியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், வழிநடத்துபவர்கள், கலைஞர்கள் மற்றும் கல்வியாளர்கள்) குறிப்பாக உள்ளடக்க விழைகின்றது.

எமது இரண்டாவது தொழில்வல்லுன பயிற்சி நிகழ்ச்சியான ‘தீவிர அருங்காட்சியக பயிற்சி’, பேப்பர் மற்றும் புகைப்பட பாதுகாப்பு’ பற்றி ஜூன் 27 இடம்பெற்றது. உலக நினைவுச் சின்னங்கள் நிதியுடன் இணைந்து வழங்கப்பட்ட இப் பயிற்சிப்பட்டறையானது 15 அருங்காட்சியகங்கள் மற்றும் கேலரி

தொழில்வல்லுனர்கள், இலங்கையில் 11 நிறுவனங்களிலிருந்து வருகை தந்தனர்.

'Museum Intensive II: Paper and Photography Conservation' ஆனது பேப்பரால் செய்யப்பட்ட பொருட்களை பாதுகாப்பது எப்படி மற்றும் பேப்பர் எதனால் சேதமைடைங்கின்றது என்பதைப் பற்றிய அறிமுகம் வழங்கப்பட்டது. மேலும் கையாளும் முறை, சேமிப்பு மற்றும் பதப்படுத்தல் முறைகள் பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது. அமர்வுகளானது கலைமாமணி லோயி ரோவ், City & Guilds of London Art School இன் அதிபர், நிகோலா வோக்கர், Tutor on the Book and Paper Conservation course, City & Guilds of London Art School, மற்றும் சிரேஷ்ட காப்பாளர் Paper & Photography, National Trust, UK ஆவர்.

மேலும், MMCA இலங்கை எமது முதல் ஆய்வு வெளியீடான 'Second Volume' இன் சிங்களம் மற்றும் தமிழில் ஆகஸ்ட் 2024 வெளியிடப்படும். 'இரண்டாவது தொகுப்பு'ஆனது பெப்ரவரி 2024 தொடங்கப்பட்ட '88 ஏக்கர்கள்' கண்காட்சியை தொடர்ந்து வெளியிடப்படும். சிங்கள மற்றும் தமிழ் வெளியீடுகள் எமது வலைத்தளத்தில் இலவசமாக, தரவிறக்க கூடிய வகையில் வெளியிடப்படும். வெளியிட்டிற்காக காத்திருங்கள்!

எமது ஸ்தாபக புரவலர்கள் மட்டக்களப்பில் எடுத்தாளுமை செய்யப்பட கண்காட்சியில் 12-14 ஜூலை பங்கேற்றனர். இலங்கையின் வண்ணமயமான சமகால கலைக்கு கொழும்பைத் தவிர ஏனைய மாவட்டங்களிலுள்ள கலைஞர்கள் எவ்வாறு பங்களிக்கின்றனர் என இக் கண்காட்சியின் பார்வையிட சென்றதின் பொழுது நாம் அறிந்து கொண்டோம்.

'Condé Nast Traveller'வின் மே மாத பதிப்பில் ஆதிலா இஸ்மாயில் 'கொழும்பின் சிறப்பு இடங்கள்' எனும் கட்டுரையின் கீழ், MMCA இலங்கை எல்லோரும் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களில் ஒன்றாக குறிப்பிட்டுள்ளார். நீங்கள் இலங்கைக்கு வருகை தர எண்ணினால், MMCA இலங்கைக்கு வருகை தர தவறாதீர்கள்.

இறுதியாக, 'முழு நில அமைப்பு' எனும் எமது அடுத்த கண்காட்சி செப்டம்பர் 12 தொடங்கவுள்ளது. இக் கண்காட்சியானது எடுத்தாளுநர் சந்தேவ் ஹண்டி மற்றும் தினால் சசீவ இணைந்து இலங்கை, சுவீடன், ஐக்கிய அரபு ராஜ்ஜியம், நெதர்லாந்து, மற்றும் அமெரிக்கவைச் சேர்ந்த 29 சமகால கலைஞர்களை

காட்சிப்படுத்துகின்றனர்.இன்ஸ்டாகிராம் மற்றும் முகப்புத்தகத்தில் எம்முடன் இணைந்திருங்கள்! மாதாந்தம் எம்மைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள எமது செய்தித்தாளிற்கு பதிவு செய்யுங்கள்!